## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# திருவெழுகூற்றிருக்கை

## திருவெழுகூற்றிருக்கை தனியன்கள்

### எம்பெருமானார் அருளிச் செய்தவை

வாழி பரகாலன் வாழி கலிகன்றி *
வாழி குறையலூர் வாழ் வேந்தன் * - வாழியரோ
மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன் *
தூயோன் சுடர்மான வேல்

[1]சீரார் திருவெழுகூற்றிருக்கை என்னும் செந்தமிழால் *
ஆராவமுதன் குடந்தைப் பிரான் தன் அடியிணைக் கீழ் *
ஏரார் மறைப் பொருள் எல்லாம் எடுத்து இவ்வுலகு உய்யவே *
சோராமல் சொன்ன அருள்மாரி பாதம் துணை நமக்கே

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# திருவெழுகூற்றிருக்கை

2672 * ஒரு பேர் உந்தி இருமலர்த் தவிசில் *
ஒரு முறை அயனை ஈன்றனை * ஒரு முறை
இருசுடர் மீதினில் இயங்கா * மும்மதிள்
இலங்கை இருகால் வளைய * ஒரு சிலை
ஒன்றிய ஈரெயிற்று அழல் வாய் வாளியின்
அட்டனை * மூவடி நானிலம் வேண்டி *
முப்புரி நூலொடு மானுரி இலங்கு
மார்வினின் * இருபிறப்பு ஒரு மாணாகி *
ஒரு முறை ஈரடி மூவுலகு அளந்தனை *
நால் திசை நடுங்க அஞ்சிறைப் பறவை
ஏறி * நால் வாய் மும்மதத்து இரு செவி
ஒரு தனி வேழத்து அரந்தையை * ஒரு நாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை * முத்தீ
நான்மறை ஐவகை வேள்வி * அறுதொழில்
அந்தணர் வணங்கும் தன்மையை * ஐம்புலன்
அகத்தினுள் செறுத்து * நான்குடன் அடக்கி
முக்குணத்து இரண்டவை அகற்றி * ஒன்றினில்
ஒன்றி நின்று * ஆங்கு இருபிறப்பு அறுப்போர்
அறியும் தன்மையை * முக்கண் நால்தோள்

[1] இத்தனியன் மிகுதியாக வழங்குவதில்லை

ஐவாய் அரவோடு * ஆறுபொதி சடையோன்
அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை *
ஏழுலகு எயிற்றினில் கொண்டனை * கூறிய
அறுசுவைப் பயனும் ஆயினை * சுடர் விடும்
ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை * சுந்தர
நால்தோள் முந்நீர் வண்ண! * நின் ஈரடி
ஒன்றிய மனத்தால் * ஒரு மதி முகத்து
மங்கையர் இருவரும் மலரன2[2] * அங்கையின்
முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை *
நெறி முறை நால்வகை வருணமும் ஆயினை *
மேதகும் ஐம்பெரும் பூதமும் நீயே *
அறுபதம் முரலும் கூந்தல் காரணம் *
ஏழ் விடை அடங்கச் செற்றனை * அறுவகைச்
சமயமும் அறிவரு நிலையினை * ஐம்பால்
ஓதியை ஆகத்து இருத்தினை * அறம் முதல்
நான்கவையாய் மூர்த்தி மூன்றாய் *
இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து
நின்றனை * குன்றா மதுமலர்ச் சோலை
வண்கொடிப் படப்பை * வருபுனல் பொன்னி
மாமணி அலைக்கும் * செந்நெல் ஒண்கழனித்
திகழ் வனம் உடுத்த * கற்போர் புரிசைக்
கனக மாளிகை * நிமிர் கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும் * * செல்வம் மல்கு தென்
திருக்குடந்தை * அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க * ஆடரவு அமளியில் அறிதுயில்
அமர்ந்த பரம! * நின் அடியிணை பணிவன்
வரும் இடர் அகல மாற்றோ வினையே

[3]இடங்கொண்ட நெஞ்சத்து இணங்கிக் கிடப்பன * என்றும் பொன்னித்
தடங்கொண்ட தாமரை சூழும் மலர்ந்த தண் பூங்குடந்தை *
விடங்கொண்ட வெண்பல் கருந்துத்தி செங்கண் தழலுமிழ் வாய் *
படங்கொண்ட பாம்பணைப் பள்ளி கொண்டான் திருப்பாதங்களே

**அடிவரவு:** ஒருபேர் காரார்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

[2] மலரென
[3] இப்பாட்டு கம்பநாட்டாழ்வார் செய்ததென்பர்